***பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு***

***திருவழிபாடு ஆண்டு - C***

**2025-05-25**

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 15: 1-2, 22-29,*

*திருப்பாடல்கள் 67: 1-2. 4. 5,7 (பல்லவி: 3),*

*திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 21: 10-14, 22-23,*

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 14:23-29)*

*திருப்பலி முன்னுரை*

*அமைதிக்குரியவர்களே, இறைமகன் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். நாம் இறைவனின் அமைதியை கொண்டவர்களாய் வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் மீது அன்பு கொண்டு, அவர் சொல்வதைக் கடைப்பிடித்து வாழவும், அதன் வழியாக இறைத்தந்தையின் அன்பைப் பெறவும் நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் மீது கொள்ளும் அன்பின் ஆற்றலால் வழங்கப்படும் அமைதியை சுவைக்க இயேசு நம்மை அழைக்கிறார். தூய ஆவியாரின் வழிகாட்டுதலால், உலகம் தரும் அமைதிக்கு மேலாக கிறிஸ்து அருளும் அமைதியை வாழ்வில் உணரும் வரம் வேண்டி இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தந்தையாம் இறைவா!

எம் திருஅவைத் தலையர்கள் மனம் குலையாது குழப்பம். கலக்கமின்றித் தெளிவுடன் உம் திருமகனைப் பற்றிய செய்திகளை உலகினுக்கு உவந்தளிக்க இறைவா உம்மை வேண்டுகிறோம்.

திருத்தூதர்களின் தெரிவே எம் இறைவா!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்காகத் தம் உயிரையும் கொடுக்கத் துணிந்த பவுல், பர்னபா போன்று எம்மவர்க்காக எதையும் இழந்திடத் துணியும் மனதைத் தர இறைவா உம்மை வேண்டுகிறோம்.

அமைதியின் அரசே இறைவா,

பாவ இருளில் சிக்கிடும் நாங்கள் உமது மாட்சியாயும், எமது விளக்காகவும் உள்ள இயேசுவினை இனம் கண்டு கொண்டு ஏற்றமிகு வாழ்வு வாழ வரமருள இறைவா உம்மை வேண்டுகிறோம்.

தந்தையே இறைவா!

நாங்கள் எமதாண்டவர் கிறிஸ்து மீது அன்பு கொண்டு, அவர் சொல்வதைக் கடைப்பிடித்திடவும். அதன் வழியாக உமது அன்புக்கு ஏற்றோராய் வாழ்ந்திடவும் உமது குடியிருத்தலை ஏற்றிடும் வரமும் பெற்றிட இறைவா உம்மை வேண்டுகிறோம்.

*எமது இறைவா!*

*உம் திருமகனின் வார்த்தைகளுக்கேற்ப நாங்கள் கலங்கிடாமலும், மருண்டிடாமலும் வாழ அருள் தாரும். இதன் வழியாக நாங்கள் இயேசுவின் இனிமையை நாளும், பொழுதும் சுவைத்திடும் பேரனுபவம் பெற்றிட இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்வின் துணையாம் இறைவா,*

*நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*மேன்மைமிகு அரசராம் இறைவா,*

*பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக்களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*